(இ) ஆமெனில், ஏனைய இடங்களிலுள்ள சுற்றுலாப் பெருமாளிகையின் வாடகையையும் இதைப் போன்று குறைக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : பாளையங்கோட்டையில் மட்டும் சுற்றுலா மாளிகையில் சார்ஜ் குறைக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் குறைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? மற்ற இடங்களிலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : On the Southern Trunk Road, there are quite a few tourist bungalows, but most of the time, they are found occupied by officials and are not available for others for having their lunch. There are no facilities there like wash rooms and dining rooms. Will the Government, specially in the interest of tourism, see that one wash-room and one dining room are kept at the disposal of the tourist ? They may be charged a nominal fee.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதில் தங்குவோருக்கான வரிசைப் பட்டியல் இருக்கிறது. அந்த வகையில் அமைச்சர்களும் மற்றவர்களும் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அம்மையார் கூறிய யோசனை பரிசீலனைக் குரியது.

திரு. கே. ராமதாஸ் : வாடகையைக் கட்டுப்படுத்துவதைப் போன்று மற்றொன்றும் செய்ய வேண்டும். சுற்றுலா மாளிகைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகளில் கொடுக்கப்படும் பகல் உணவு ஒன்றுக்கு ரூ. 7½ கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விலைவாசி ஏற்றம் என்று அதற்குக் காரணம் சொன்னாலும் கூட சுற்றுலா செல்கிறவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போன்றவர்கள் தங்கும்போது, மற்றவர்கள் அவர்களுக்குச் சாப்பாடு போட்டுவிடுவார்கள். ஆகவே அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

Price of paddy

*189 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for fixing the price of paddy at a rate lower than Rs. 45 per quintal in Madras when it was fixed as Rs. 56–25 in Bihar, Kerala, Uttar Pradesh, West Bengal, and Madhya Pradesh; and

(*b*) whether by way of incentive the Madras Government propose to increase the price of paddy ?

நெல் விலை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) பீஹார், கேரளம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்களில் குவிண்டால் நெல் விலை ரூ. 56.25 ஆக நிர்ணயித்துள்ளபொழுது, தமிழகத்தில் ரூ. 45–க்கும் குறைவாக நிர்ணயித்த காரணம் என்ன ?

(இ) தமிழக அரசு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் நெல் விலையை அதிகரிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பீகார், கேரளம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஆகிய மாநிலங்கள் தரமான நெல் ரகங்களுக்கு.குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 56.25 ஆகக் கொள்முதல் விலைகளை வரையறுத்துள்ளன என்று கூறுவது சரியல்ல. உண்மையில் 1967-68-ம் ஆண்டுக் காலத்திற்கென உற்பத்தியாளர்களிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக, வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக்குழுவினால் இந்த மாநிலங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

மாநிலங்கள். (1)		1967–68-ம் ஆண்டிற்கு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதற்காக, வேளாண்மை விலைகள் ஆய்வு, ஆணைக்குழு பரிந்துரை செய்த விலைகள். (2)
		ரூ.
1.	பீஹார் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
2.	கேரளம் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
3.	உத்திரப் பிரதேசம் (குவிண்டால் ஒன்றுக்கு).	43
4.	மேற்கு வங்காளம் (குவிண்டால் ஒன்றுக்கு)	46
5.	மத்தியப் பிரதேசம் (குவிண்டால் ஒன்றுக்கு)	44

கேரளத்தில், வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக்குழு பரிந்துரை செய்த வீதத்தை விட மிக உயர்ந்த வீதத்தில் நெல் விலைகள் வரையறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வேளாண்மை விலைகள் ஆய்வு ஆணைக் குழு பரிவுரை செய்ததற்கேற்ப, 1967–68 பருவ காலத்தில், மட்ட ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றின் விலை ரூ. 43 ஆக இருக்க வேண்டும் என்று இந்திய அரசு கருத்துரை தெரிவித்தது. மற்ற நெல் வகைகளுக்கும் அவற்றின் தர வேறுபாடுகளுக்கிணங்க விலையை மாற்றி அமைக்குமாறு கூறியது. நன்கு ஆலோசனை செய்த பிறகு, இந்த அரசாங்கம் 15–8–67–லிருந்து நெல்லிற்குக் கீழ்க்கண்ட பேரளவு விலைகளை வரையறுத்துள்ளது :

சிறந்த ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 48.

நடுத்தர ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45.

மட்ட ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 43.

(இ) அரசாங்கம் தற்போது வரையறுத்துள்ள விலைகள் உற்பத்தியாளர்களுக்குப் போதுமான வருமானத்தை அளிக்கும் என்று கருதப்படுவதால், விலைகளை மேலும் உயர்த்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. விலைகளை மேலும் உயர்த்தினால், பயன் கொள்வோர் அதன் விளைவாக அரிசிக்கு அதிகமான விலை கொடுக்க வேண்டி வரும்.

தமிழகத்தில் அதிகமாகத்தான் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் கேரள கொள்முதல் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்வதற்கில்லை. அங்கே நிலப் பிரபுக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் உள்ள கொள்முதல் திட்டம் இந்த அரசிற்கு உடன்பட்டதல்ல. வேளாண்மை ஆய்வுக் குழுவின் பரிந்துரைப்படி இந்திய அரசின் ஆலோசனையின் அடிப்படையில் ஆகஸ்ட் 15–ம் தேதி முதல் ரூ. 43, 45, 48 என்ற அளவில் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கேள்விக்குப் பதில் என்னவென்றால், விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விலையை உயர்த்த வேண்டுமென்று இந்த அரசு கருதவில்லை. விவசாயிகளுக்கு உரங்கள், பூச்சி மருந்துகள் கொடுக்கிறோம். கடன்கள் வழங்குகிறோம். அவற்றின் மூலமாகவெல்லாம் அவர்களுக்கு இந்த அரசு உற்சாகமளித்து வருகிறது.

6th March 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : சர்க்காரிலிருந்து வாய்க்கால் மூல மாகத் தண்ணீர் கொடுக்கும் பகுதிகளுக்கு விலையை எப்படி நிர்ணயித் தாலும் பரவாயில்லை. ஆனால், கிணற்றின் மூலமாகத் தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு, இதே விலை கொடுக்கப்படுகிறது. அது அவர்களுக்குக் கட்டுபடியாகததால், கரும்பு, மிளகாய் போன்ற பயிர் களை விவசாயம் செய்வதற்குப்போய்விடுகிறார்கள். ஆகையால் கிணற்று நீர் மூலம் விவசாயம் செய்கிற விவசாயிகளிடம் கொள்முதல் இல்லை என்று இந்த சர்க்கார் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் கருத்து முற்றிலும் தவறானது. இந்த அரசாங்கம் 20 சத வீதம்தான் கொள் முதல் செய்கிறது. அந்த அடிப்படையான விஷயத்தைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய விளைச்சல் 40 லட்சம் டன் என்றால் அதில் எட்டு லட்சம் டன்தான் கொள்முதல் செய்கிறோம். ஏக்கருக்கு இப்போது 20 மூட்டை விளைகிறது. அதில் நான்கு மூட்டைகளை நாம் விலைக்கு வாங்குகிறோம். மீதியுள்ள 16 மூட்டைகளை அவர்கள் வேறு விலைக்கு விற்கிறார்கள். விலைவாசிக் கட்டுப்பாட்டின் முக்கியமான அம்ச மாக இந்த உணவுப் பொருள் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கிறது. அதனால் பிளானிங் கமிஷன் கொண்டிருக்கிற அடிப்படையான அம்சத்தை விலைவாசிக் கட்டுப்பாட்டு வேலையை இந்தத் தமிழக அரசாங்கம் நல்ல முறையில் செய்து வருவதாகத்தான் கருதுகிறது. விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் விலை மிகவும் நியாயமானது என்பதில் மிகத் தெளிவாக இந்த அரசாங்கம் இருக்கிறது.

திரு. பி. எதிராஜ் : தஞ்சை ஜில்லாவில் விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் கொள்முதல் விலை நியாயமில்லை என்று ஆயிரக்கணக்கான விவசாயி கள் நாகப்பட்டினத்தில் ஊர்வலமாக வந்து கலெக்டரிடம் மனு கொடுத் திருக்கிறார்கள். தூதுக் குழுவாக வந்து அமைச்சரிடம் கோரிக்கை தெரி வித்திருப்பதாகவும் தெரிகிறது. ஆகையால் அந்த விலை அதிகப்படுத்தும் பிரச்சினையை மீண்டும் அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் இதைப் பிரச்சாரத்திற்கு வேண்டுமானால் சொல்லிக்கொண்டே யிருக்கலாம். எனக்கு இன்று காலை 11 மணிக்கு தஞ்சையிலிருந்து கிடைத்திருக்கிற தகவல்படி சிலர் விலை குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள் என்று தெரிகிறது. ஒரு மாதத்திற்கு முன்பு கலெக்டர்கள் மகாநாடு கூட்டி, ஐந்து மாதங்களுக்குள்ள 5 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. அது வெற்றிகரமாக நடந்திருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்தச் சபையில் நான் சொல்ல முடியும். இன்றைக்கு ஒன்றரை மாத காலத்திற்குள் 2,69,274 டன்கள் கொள் முதல் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காகத் தஞ்சை மாவட்ட மக்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாலாம் தேதி முடிய 1,48,758 டன்கள் கொள்முதலுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் கொடுக்கும் விலை நியாயமானது என்ற உற்சாகத்தோடு விவசாயி கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். அதிகாரிகளும் இந்தக் குறுகிய காலத்தில் இரண்டு லட்சத்திற்கு அதிகமான டன்கள் நெல் கொள்முதல் செய்திருக் கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகள் திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி போன்ற சில பகுதிகள்தான் பாதிக்கப்பட்டிருக் கும். இருந்தாலும் அதிக அளவுக்கு கொள்முதலுக்கு கொடுத்திருக் கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : தென்னார்க்காடு மாவட்டத்தில் ஒரு ஏக்கர் பயிர் செய்வதற்கு ரூ. 400 முதல் 450 வரையில் செலவு ஆகிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் இந்த விவசாயச் செலவு கூடியும், குறைந்தும் இருக்கிறபடியால் ஆங்காங்கு ஆகின்ற செலவைப் பொறுத்து விலையை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் பிரச்னையை அரசியலுக்குத்தான் பயன்படுத்துகிறார்கள் என்று திரும்பத் திரும்ப சொல்லியாகிவிட்டது. ஒரு ஏக்கரில் இப்போது ஏடிடி போன்ற விதைகள் போடுவதன் மூலம் 30 மூட்டை அளவில் உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். உர வகைகள், பூச்சி மருந்துகள் இன்னும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. தஞ்சை ஜில்லாவில் நீர்த் தீர்வையினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கருதி 40 லட்சம் ரூபாய் வரையுள்ள அந்த வரியை வஜா செய்திருக்கிறோம். ஆகையால் உறுப்பினருக்கு மட்டும்தான் விவசாயிகளிடம் அக்கறை இருக்கிறது என்று கருதத் தேவையில்லை. அரசாங்கம் அந்த நச்சு வட்டத்தில் சிக்கி விடக்கூடாது என்பதில், தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க விரும்பவில்லை.

THIRU A. R. DAMODARAN : In view of the excellent response that has been received for the Government's procurement programme, would it be possible to finish off the procurement of nine lakh tonnes before May and allow free market to exist after May ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் யூகம் தவறானது. சம்பா பயிர்களுக்கு குறியீடு 5 லட்சம் டன்தான். மொத்த அளவில் குறுவையும் சேர்ந்து ஆண்டுக்கு 9 லட்சம் டன்னே தவிர 5 லட்சம் டன் அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் குறியீடுகள் முடிந்த பிறகு உறுப்பினர் சொல்லியது போல தாலுக்காவுக்குத் தாலுக்கா உள்ள தடைகள் தளர்த்தப்படுகின்றன. குறிக்கோள் முடிந்தது என்று தெரிந்தவுடனே அதைச் செய்யலாம். மாவட்டத்திற்கு மாவட்டம் உள்ள கட்டுப்பாடு கடந்த ஆண்டு போலவே கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார் : அமைச்சர் ஒவ்வொரு முறையும் விலையைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது அதைக் கட்சிப் பிரச்சாரத்திற்காக சொல்வதாகச் சொல்கிறார். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஊழியர்களையே தனித் தன்மையில் அழைத்துக் கேட்டால் உண்மை தெரியும். கொள்முதலுக்கு அதிகமாக விவசாயிகள் கொடுத்திப்பதாகச் சொன்னார்கள். அதிகாரிகள் வற்புறுத்தலினால்தான் அவ்வளவு கொள்முதல் ஆயிற்று என்பதைப் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த விலை நியாயமானதுதான் என்று சொல்கிறார்கள். அதற்கு அமோகமான ஆதரவு இருப்பதால்தான், சென்ற வருஷம் இருந்ததைவிட இந்த வருஷம் அதிகக் கொள்முதல் ஆகியிருக்கிறது என்று சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் வி. கே. ராமசாமி முதலியார் அவர்களுக்குத் தெரியும். போன வருஷத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 ஆயிரம் டன்தான் கொள்முதலாகியது. இந்த வருஷம் 22 ஆயிரம் டன் ஆகியிருக்கிறது. தென்னார்க்காட்டில் போன வருஷம் 16 ஆயிரம் டன்னாக இருந்தது இப்போது 50 ஆயிரம் டன்னுக்கு உயர்ந்திருக்கிறது. தஞ்சையில் போன ஜனவரி, பிப்ரவரியில் ஒரு லட்சத்து பதினாராயிரம் டன்னாக இருந்தது. இப்போது ஒரு லட்சத்து 48 ஆயிரம் டன்னாக ஆகியிருக்கிறது. திருச்சியில் கொள்முதல் அதிகம் ஆகவில்லை என்றாலும் போன வருஷம் 6 ஆயிரம் டன் என்று இருந்த இடத்தில் இப்போது 8,650 டன்னாக ஆகியிருக்கிறது. கோயம்புத்தூரில் போன வருஷம் 2,200 டன்னாகவும் இந்த வருஷம் இந்த இரண்டு மாதங்களில் 7,250 டன் வந்திருக்கிறது. வட ஆர்க்காட்டில் போன வருஷம் 9 ஆயிரம் டன்னாகவும் இந்த வருஷம் 17 ஆயிரம் டன்னாகவும் இருக்கிறது. அப்படி எல்லா மாவட்டங்களிலும் நல்ல முறையில் விவசாயிகள் ஒத்துழைத்திருக்கிறார்கள். எங்கள் கட்சிக்காரர் சொல்கிறார்கள் என்பதற்காக அல்ல. தவறை எந்தக் கட்சிக்காரர்கள் சொன்னாலும் இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

6th March 1968]

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, I would like just to pass on some information to Government. The price for paddy paid in Kerala is 65 rupees per quintal and even that is considered inadequate, having regard to the cost of production in that State. It is not as mentioned by the Hon. Minister.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஒன்றும் அதை விமர்சனம் செய்யவில்லை. அதை முற்போக்கான கொள்கை என்று சொல்லவில்லை. கேரள நிலைமை வேறு, நமக்குள்ள நிலைமை வேறு, ஐந்து எக்கருக்கு மேலுள்ள நிலப் பிரபுக்களுக்குக் கொடுப்பது, என்ற அங்குள்ள நிலைமையைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் விமரிசனம் செய்வது. அங்கே வசூலாவது நம்மிடம் உள்ளதைப் போல அல்ல. நமக்கு வசூலாவதில் பாதிகூட அங்கே வசூலாவதில்லை.

THIRU A. R. DAMODARAN : The Hon. Minister has mentioned that only 20 per cent is collected by procurement. Would it be possible for the Government to give the mirasdars the surplus whenever twenty per cent is procured ? Actually there is no such thing as twenty per cent.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய மாநிலம் கூட்டாக இருந்தபோது 20 சத விகிதம் இருந்தது. நஞ்சையில் 55 சத விகிதத்திற்கு வந்து விடுகிறது. நாம் ஒரு லெவி முறை வைத்திருக்கிறோம். ஒரு எக்க ருக்குக் குறைந்தவர்கள் கொள்முதலுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. பதிமூன்று லட்சம் விவசாயிகள் இதனால் பயன் பெறுகிறார்கள். ஒரு எக்கரில் இருந்து 10 எக்கர் வரையில் ஸ்லேப் (Slab) முறை வைத்திருக்கிறோம். பத்து எக்கர் உள்ளவர்கள் 40 மூட்டை கொடுக்க வேண்டுமென்றும் ஐந்து முதல் ஏழு எக்கர் உள்ளவர்கள் கொடுக்க வேண்டியது என்பதற்கு ஒரு ஸ்லாப்பும் இருக்கிறது. நான் இங்கே கூறு வது பொதுவாக உள்ள ஒட்டுமொத்தமான கணக்கு. ஏற்கனவே எவ் வளவு கொள்முதல் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலான அளவில் கொள்முதல் செய்யப்படுவதில்லை.

Coimbatore Medical College

*190. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state— 3-40 p.m.

(*a*) the estimated expenditure for the construction of buildings for the Coimbatore Medical College ; and

(*b*) the place where the building will be constructed ?

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு எத்தனை லட்சம் ரூபா யில் கட்டிடம் கட்டத் திட்டம் உள்ளது ?

(இ) எந்த இடத்தில் கட்டிடம் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) கோவை மருத்துவக் கல்லூரிக்கு இதுவரை ரூ. 30.94 லட்சம் பெறுமானமுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அக்கல்லூரிக்கு மேலும் தேவைப்படும் கட்டிடங்களின் அவசியம் குறித்து அரசு ஆலோ சித்து வருகின்றது.